திருமதி த. ந. அனந்தநாயகி: சிலைகளை எந்தெந்த இடங்களில் அமைக்கவேண்டுமென்று ஏதாவது சட்டதிட்டங்கள் போட்டிருக்கிறீர்களா? அதற்கான ஏதாவது விதிகள் உண்டா? அப்படிச் சிலைகள் வைப்பது போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருந்தால் அந்த இடங்களில் வைக்கக்கூடாது என்பதற்கான விதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஏற்கனவே அதற்கு விதிகள் இருக்கின்றன, அந்த விதிகள் எல்லாம் ஆராய்ந்துதான் சிலைகள் வைக்கப்படுகின்றன.

Rural Employment Programme

* 18. *Q.*—THIRU N. K. PALANISWAMY:
THIRU K. T. K. THANGAMANI:
THIRU M. P. SARATHY: } Wil the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether district-wise plans have been formulated to mplement a crash programme for rural employment in this State;

(*b*) if so, details of the same; and

(*c*) the amount of grant promised by the Centre for the same?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) திட்டமாக நிறைவேற்றப்படும் திட்டங்களின் விவரங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து கேட்கப்பட்டுள்ளன.

(உ) மாவட்டம் ஒன்றுக்கு ரூ 12.50 லட்சம் (தொழிலாளர் தொடர்பாக ரூ. 10.00 லட்சம், சாதனங்கள் தொடர்பாக ரூ. 2.50 லட்சம்). இம்மாநிலத்திற்காக மொத்தம் ரூ. 162.50 லட்சம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: மத்திய அரசு கிராம மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்காக க்ராஷ் ப்ரோக்ராம் என்று சொல்லி ரூ. 50 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். அதன் ஒரு பகுதியாகத்தான் இப்படி மாவட்ட ரீதியாகக் கொடுக்கிறார்கள். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ரூ. 1,25,000 என்றுதான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மேற்கொண்டும் கொடுக்கப்படும் என்று ஏற்கனவே அறிவித்திருக்கிறார்கள். நான் அறிய விரும்புவது இந்த ப்ரோக்ராம் அடிப்படையில் ஏற்கனவே செய்த வேலைகள் மாதிரி மண் போடுவது, அல்லது குளங்களை ஆழப்படுத்துவது என்ற வேலைகள்தான் வருகின்றன. ஆனால் மக்களுக்கு உதவிகரமாக இருக்கக்கூடிய பணிகளில் ஈடுபடும்படி ஆட்கள் சேர்க்கப்படுவார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மத்திய அரசு இந்தத் திட்டத்தின் கீழ் ரூ 162.50 லட்சம் தருகிறது. அந்த வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் பத்து வட்டாரங்கள், பத்து

1971 ஜூன் 22]

ஒன்றியப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அது போதாது என்ற காரணத்தினால்தான் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தமது நிதிநிலை அறிக்கையில் தெளிவுபட எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஐம்பது கோடி ரூபாய் ஒதுக்கியிருந்தாலும் மக்கள் எண்ணிக்கை அடிப்படையில் ஒதுக்கப்படுகிற சூழ்நிலை ஏற்படுமானால் அதிகத் தொகை தமிழ் நாட்டுக்கு வந்திருக்கும். மாவட்ட அடிப்படையில் என்று வைத்துக் கொண்டிருப்பதன் காரணமாக வட மாநிலங்களுக்கு அதிகமான தொகையும், பெரிய மாவட்டங்களாக வைத்துக் கொண்டிருக்கிற தமிழகத்திற்குக் குறைந்த தொகையும் பெறும் படியான ஒரு நிலை ஏற்பட்டுள்ளது. அதையனுசரித்துத்தான் தமிழக அரசு இந்த நிதிநிலை அறிக்கையில் மேற்கொண்டு ஒரு கோடி ரூபாய் ஒதுக்க முன்வந்து ஒவ்வொரு மாவட்டத்திலும் பத்து, பத்து ஒன்றியங்களை இத்திட்டத்தின்கீழ் சேர்த்துக் கொள்ளலாம் என்று ஒரு திட்டம் இப்போது போடப்பட்டிருக் கிறது. ஏற்கனவே வளர்ச்சியடைவதற்காக பல்வேறு துறை களில் எடுத்துக் கொண்டிருக்கிற திட்டங்களை இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரக்கூடாது, இத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அப்பாற்பட்ட திட்டங்களாக அவை அமையவேண்டும் என்று குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள், அவர்கள். இதன் மூலம் வேலைவாய்ப்பு ஏற்படுகிறது என்பது மட்டுமல்லாமல், இதன் மூலம் ஏற்படுகிற பலன் நிலையான பலனாக இருக்க வேண்டும், அவை அந்தந்த இடங்களில் பயன்படுகிற தன்மையில் இருக்கவேண்டும் என்ற குறிப்பையும் மத்திய அரசு தந்திருக்கிறது. அந்த அடிப் படையில் திட்டங்கள் தரும்படி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

திரு. மா. பா. சாரதி: ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பத்து ஒன்றியங்கள் என்று அளிப்பதை விட அந்த மாவட்டத்திலுள்ள எல்லா ஒன்றியங்களுக்கும் சேர்ந்து என்று திட்டம் வகுப்பது பொருத்தமாக இருக்குமல்லவா? அதுபற்றி அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மத்திய அரசு கொடுத்திருக்கக்கூடிய திட்டத்தின் அடிப்படையில் ஒரு மாவட்டத்திற்கு ஆயிரம் பேர்கள் என்றும் ஒரு ஒன்றியத் திற்கு நூறு பேர்கள் என்றும் வைத்திருக்கிறார்கள். அந்த வகையில் பத்து ஒன்றியங்கள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. மாநில அரசும் இப்படிப்பட்டதொரு திட்டத்தை மேற் கொண்டிருப்பதால் மேற்கொண்டும் ஒரு பத்து ஒன்றியங்கள் வந்துவிடும். சிலபல மாவட்டங்களில், தர்மபுரி, நீலகிரி, கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களில் முழுவதுமே அதில் அடங்கிவிடும். மற்ற மாவட்டங்களில் தொடர்ந்து போகிற போது, மூன்றாண்டுகள் என்று சொல்லியிருப்பதால், வேறு பல வசதிகளையும் செய்ய முடியும். ஒரு ஒன்றியத்திற்கு நூறு பேர்கள்

என்று சொல்லியிருப்பதால் பத்து ஒன்றியங்கள் மத்திய அரசின் திட்டத்தின்கீழும், பத்து ஒன்றியங்கள் அதேமாதிரியான மாநில அரசுத் திட்டத்தின்கீழும் மேற்கொள்ளப்படும்.

திரு. கே. ஆர். கிருஷ்ணன் : ஒரு மாவட்டத்திற்குப் பத்து ஒன்றியங்கள் என்ற அளவில் இந்த வேலைவாய்ப்பு வசதி அளிக்கும்போது ஊத்தங்கரை போன்ற பெரிய பஞ்சாயத்து யூனியனுக்கு சிறிய அளவு வாய்ப்பும், சிறிய பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிகப்படியான வாய்ப்பும் ஏற்படுவதால் ஒரே மாதிரியாகப் பகிர்ந்தளிக்க முடியாதொரு நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, ஒவ்வொரு யூனியனுக்கும் இவ்வளவு என்று அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மத்திய அரசு பத்து, மாநில அரசு பத்து 20 ஒன்றியங்கள் என்று எடுத்துக் கொள்ளப்படுகிற திட்டமாகத்தான் அமைந்துள்ளது. எந்தெந்த ஒன்றியங்களை எடுத்துக்கொள்ளலாம் என்பதில் மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கேட்டு அவர்கள் ஆங்காங்குள்ள பிற்போக்கான நிலைமை மற்றவைகளைக் கருத்தில்கொண்டு அவர்கள் ஒரு ப்ரயாரிட்டி லிஸ்டை, ஒரு பட்டியலைத் தயாரித்துத் தந்திருக்கிறார்கள். அப்பட்டியலின்படி முதல் பத்து ஒன்றியங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கலந்து கொண்டு அவர்கள் எந்தெந்த ஒன்றியங்கள் பிற்போக்கான நிலையில் இருக்கின்றன, எந்த எந்த ஒன்றியங்களை இத்திட்டத்தின் கீழ் மேற்கொண்டால் அந்தப் பகுதிகளும் வளர்ச்சி அடையும், இத்திட்டத்தையும் ஒழுங்காக நிறைவேற்ற முடியும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சிபார்சின் பேரில் ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இத் திட்டத்தை நிறைவேற்றுகிற முயற்சியையும் மேற்கொண்டிருக்கிறது.

திரு. எ. சுப்பிரமணியம் : ஒதுக்கப்பட்டிருக்கும் பணம் ஒரு பஞ்சாயத்து யூனியனுக்குக் கிட்டத்தட்ட ஒரு லட்சம் ரூபாய் தான் வரும் என்று சொல்லப்பட்டது. இந்தத் தொகை யானைப் பசிக்குச் சோளப் பொரி போட்டது போல்தான் இருக்கின்றதே தவிர, பிரச்சனையைத் தீர்க்கச் சிறிதும் போதாது. கிராமப் புறங்களில் வேலையில்லாதோர் பிரச்சனையைத் தீர்ப்பதைத் தலையாய கடமையாக ஏற்றுக் கொண்டு இன்னின்ன திட்டங்களை ஒரு குறிப்பிட்ட கால அளவுக்குள்ளாக நிறைவேற்றுவது என்று திட்டமிட்டால்தான் இதற்குத் தீர்வு காண முடியும் என்ற அடிப்படையில் அதற்கேற்றவாறு பணம் ஒதுக்க வேண்டுமென்று மத்திய அரசை நம்முடைய அரசு வலியுறுத்துமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஒன்றுமே இல்லாதிருந்த நிலையில் ஏதோ கொஞ்சம் வந்தது. அந்த அளவிலே மகிழ்ச்சி அடைய வேண்டியது தான். இந்தத் திட்டத்தின்படி

1971 ஜூன் 22]

30,000 பேருக்கு மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய் கொடுக்கும் வகையில் வேலை வாய்ப்பு ஏற்படுகிறது என்பது மாத்திரம் அல்ல; அந்தந்த ஒன்றியப் பகுதிகளும் சில பல வசதி வாய்ப்புகளை, வளர்ச்சி முறைகளைப் பெறும் நிலைமை இருக்கிறது. 'சம்திங் இஸ் பெட்டர் தேன் நத்திங்' என்பதற்கேற்ப ஒன்றுமே இல்லாத நிலையிலே இந்த அளவுக்கு வந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. மேலும் பண வசதி ஏற்படும்போது இதிலே சிந்தித்து முடிவு எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

திரு. எம். பரமசிவம்: மத்திய அரசு ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு குறிப்பிட்ட தொகையையே அளிப்பதால் நம்முடைய மாநிலத்திற்குப் பாதகம் ஏற்பட்டுள்ளது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதே போன்று மாவட்டங்களுக்குத் தொகை ஒதுக்கும்போது ஒரே மாதிரி ஒதுக்குவதால் பிற்பட்ட மாவட்டங்களுக்குச் சலுகை இல்லாது இருக்கிறது. பிற்பட்ட மாவட்டங்களுக்குச் சலுகை காட்டும் வகையில் அதிகத் தொகை ஒதுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இந்தத் திட்டத்தை அங்கீகரிக்க வேண்டியது மத்திய அரசு. இங்கே திட்டங்களைத் தீட்டி என்ன திட்டங்கள் தீட்டியிருக்கிறோம் என்று மத்திய அரசுக்குத் தெரிவித்து அவர்கள் அங்கீகரித்த பிறகுதான் நிறைவேற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம். மத்திய அரசு திட்டப்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் பத்து பிளாக்குகளை எடுத்துக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். அது கன்னியாகுமரி, நீலகிரி போன்ற சிறு மாவட்டங்களாக இருந்தாலும் அங்கும் பத்து பிளாக்குகளை எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. அவர்கள் மொத்தமாக 62½ லட்சம் ரூபாய் ஒதுக்குகிறோம் நீங்கள் பார்த்து திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ளுங்கள் என்று சொல்லியிருந்தால் நாம் பின்தங்கிய மாவட்டங்களாக இருப்பவற்றுக்குச் சலுகை கொடுத்துத் திட்டத்தை நிறைவேற்ற முடியும்.

திரு. ரா. ரா. முனுசாமி: தென்னாற்காடு மாவட்டத்தில் செஞ்சி வட்டம் பின்தங்கிய பகுதி. இந்த வட்டத்தில் மூன்று ஊராட்சி ஒன்றியங்களை விட்டு விட்டிருக்கிறார்கள். இந்த வட்டத்தை வேலை வாய்ப்புத் திட்டத்தில் சேர்க்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: முழு 'மான் பவர் ஸ்கீம்" ஏற்கனவே அமலில் இருக்குமானால் அந்த ஒன்றியங்களை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நீக்கி விடுகிறார்கள். பத்து ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் பத்து தேர்ந்தெடுக்கப்பட இருக்கின்றன. அந்தப் பத்தில் இது அடங்குமா என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்தான் பார்க்க வேண்டும்.

திரு. ப. முத்துசாமி : சில மாவட்டங்களில் இதுபோன்ற ஊராட்சி ஒன்றியங்களைத் தேர்ந்தெடுப்பதில் எஸ்.எம்.எஸ். ஸ்கீமில் இருக்கும் இடங்களை ஒதுக்கிவிட்டு மற்ற யூனியன்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். எ.ஆர்.சி. ஸ்கீமில் அதிகப்படி பணம் செலவழிக்க முடியாத சூழ்நிலை இருப்பதால் அப்படிப்பட்ட யூனியன்களைக் கருத்தில் கொண்டு அவற்றையும் இந்தத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ள அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இவற்றைப் பற்றியெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆராய்ந்து அரசாங்கத்திற்கு அறிவித்தால் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கும். டெவலப்மென்ட் கவுன்சில் கூட்டத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் குறித்து வைத்துக் கொண்டு அந்த அடிப்படையில் தேர்ந்தெடுத்து அரசுக்குச் சிபாரிசு செய்தால் நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : இந்தத் திட்டத்தின் கீழ் ஓராண்டுக் காலத்திற்கு மட்டுமே தொழில் வாய்ப்புக் கொடுப்பதற்கான வசதி இருக்கிறது. ஓராண்டு கழிந்ததும் இந்தத் தொழிலாளர்களைப் பிரித்து விடக் கூடிய நெருக்கடி ஏற்படும். ஆகவே இந்தத் திட்டத்தின் கீழ் கிடைக்கும் பணத்தைக் கொண்டு நிரந்தரமாக கிராமப் பகுதிகளில் எவ்வளவு பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கக் கூடுமோ அவ்வளவு பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தத் திட்டத்தை எத்தனை ஆண்டுக்கு மத்திய அரசு நீடிக்க இருக்கிறது என்பது அவர்கள் பார்த்து முடிவு செய்ய வேண்டியது. கூடுமான வரையில் இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்ற அளவில் இந்த அரசு கருத்துக் கொண்டிருக்கிறது.

Dr. H. V. HANDE : Is the Hon. Minister aware of the fact that there is a serious fallacy, lacuna, in the scheme because this scheme envisages giving employment at the rate of Rs. 100 per month? The entire amount that is granted is just to give the payment of Rs. 1000 per month. How can we employ persons for just giving them Rs. 100 per month? We must have some developmental activities where we employ these persons. This scheme does not envisage any programme of employing them for some gainful operation or some revelopment plan. Have this Government exposed this particular fallacy of the scheme to the Central Government and asked them to rectify this fallacy?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுக்க மாவட்டத்திற்கு 10 லட்ச ரூபாயும், உபகரணத்திற்கு 2½ லட்சம் ரூபாயும் ஆக 12½ லட்சம் ரூபாய் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கொடுக்கப்படுகிறது. பதின்மூன்று

1971 ஜூன் 22]

மாவட்டங்களுக்கும் சேர்ந்து மொத்தமாக 162½ லட்சம் ரூபாய் மொத்தமாகக் கொடுக்கிறார்கள். இந்தத் திட்டத்தின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்களில் ஏற்கனவே இருக்கும் வசதி வாய்ப்புகளைப் பயன்படுத்தி வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற முடியுமா என்பதைப் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆராய்ந்து அதோடு இணைந்து செய்யும் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, ரூரல் எம்ப்ளாய்மென்ட் புரோகிராம் காரணமாக ஏற்கனவே கிராமங்களில் இருக்கும் கிராம சேவகர்கள் பாதிக்கப்படுவார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவர்கள் பாதிக்கப்படமாட்டார்கள். ஏற்கெனவே நடைபெறுகிற பணிகள் அப்படியே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதோடு சேர்ந்து கூடுதலாகத்தான் இந்தப் பணிகள் நடைபெறுகின்றன.

திரு. ஜி. ராஜாராம் : திண்டிவனம் தாலுக்காவில் "மான் பவர் ஸ்கீம்' அல்லது கிராஷ் புரோகிராம் ஆகிய இரண்டு திட்டங்களையும் பெற முடியாத யூனியன்கள் இருக்கின்றன. அவை புதிய திட்டத்தின் கீழ் கட்டாயம் இடம் பெறுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் சிபாரிசு வரவேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர் எந்தெந்த யூனியன் பகுதிகளைச் சேர்த்துக் கொள்ள இயலும் என்று குறிப்பிட்டு அனுப்புகிறார்களோ அதன்பேரில் அரசாங்கம் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

திரு. சொ. காவேரிமணியம் : தலைவரவர்களே, மாவட்டம் தோறும் ஊராட்சி ஒன்றியந்தோறும் சீரணிப் படையினர் பணியாற்றிக்கொண்டு வருகிறார்கள். இந்தத் திட்டம் அமுல்படுத்தும் நோத்தில் சீரணிப் படையினரையும் சேர்த்துக் கொள்ளும்படி அரசு ஏதேனும் உத்தரவு அனுப்பியுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அந்தத் திட்டங்கள் வகுக்கவும், பணியாளர்களைத் தேர்ந்தெடுக்கவும் திட்டத்தின் பணிகளை நிறைவேற்றவும் ஒரு குழு அமைக்கப்பட்டு இருக்கிறது. வருவாய்க் கோட்ட அதிகாரி அதனுடைய தலைவராக இருப்பார். ஊராட்சி ஒன்றியத் தலைவர் உறுப்பினராகவும், அந்தந்தப் பகுதியிலுள்ள சட்டமன்ற, பேரவை உறுப்பினர்கள், வட்டார சீரணிப் படையின் தலைவர் உறுப்பினர்களாகவும், ஊராட்சி ஒன்றியப் பெரும் தலைவர் அதனுடைய செயலாளராகவும் இருப்பர். சட்டமன்ற, பேரவை உறுப்பினர்கள், சீரணிப் படையின் தலைவர்கள் இந்தக் குழுவில் இருப்பதால், அந்தக் குழுக் கூட்டங்களில் இது பற்றிப் பேசி முடிவு எடுத்துக் கொள்ளலாம்.